## பாடம் : 3. ஆசியஜோதி

**இயல் : VI**

**பாடம் : தமிழ்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்

அ) ஜீவ ஜோதி **ஆ) ஆசிய ஜோதி** இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி

2. நேர்மையான வாழ்வை வாழ்பவர்

**அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்**

ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்

இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர்

ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்

3. ஒருவர் செய்யக் கூடாதது

அ) நல்வினை **ஆ) தீவினை** இ) பிறவினை ஈ) தன்வினை

4. எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும் **இ) எளிது + ஆகும்** ஈ) எளிதா+ஆகும்

5. பாலையெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பாலை + யெல்லாம் **ஆ) பாலை + எல்லாம்**

இ) பாலை + எலாம் ஈ) பா + எல்லாம்

6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) இன்உயிர் ஆ) இனிய உயிர் **இ) இன்னுயிர்** ஈ) இனிமைஉயிர்

7. மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) மலை எலாம் **ஆ) மலையெலாம்** இ) மலையெல்லாம் ஈ)மலை எல்லாம்

### ஆ. குறுவினா

**1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?**

இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது அரசனாலும் செய்ய முடியாத செயல்.

**2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?**

எறும்பு தன் உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுகிறது. .

**3. ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?**

ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.

**4. உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?**

நேர்மையான, இரக்க மனம் கொண்டிருக்கும் ஒருவராலேயே இந்தப் பரந்த உலகத்தை ஆள முடியும்.

KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

## இ. சிறுவினா

**1. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?**

(i) தீய செயல்களைச் செய்யாதீர்கள். பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள்.

(ii) இந்தப் பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை உங்களைவிட்டு நீக்குங்கள். இங்கு மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழ வழி செய்யுங்கள்.

## ஈ. சிந்தனை வினா

**1. பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ வேண்டும் எனில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

சுற்றுச்சூழல் என்பது இயற்கையாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்று. இது பறவை, தாவரம், விலங்கு மட்டுமின்றி மனிதனையும் சார்ந்ததாகும். பறவைகள், விலங்குகள் மனித வாழ்க்கையோடு ஒன்றியது. ஒன்றையொன்று சார்ந்து இருப்பவை. அப்படிப்பட்ட பறவைகள், விலங்குகள் வாழ நாம் வழி வகை செய்ய வேண்டும்.

# உரைநடை உலகம் - மனிதநேயம்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்

அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை

**இ) மனித நேயம்** ஈ) மனித உடைமை

2. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ............... காட்டியவர் வள்ளலார்.

அ) கோபம் ஆ) வெறுப்பு இ) கவலை **ஈ) அன்பு**

3. அன்னை தெரசாவிற்கு ............ க்கான நோபல் பரிசு' கிடைத்தது

அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் **ஈ) அமைதி**

4. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம்

**அ) குழந்தைகளைப் பாதுகாப்போம்** ஆ) குழந்தைகளை நேசிப்போம்

இ) குழந்தைகளை வளர்ப்போம் ஈ) குழந்தைகள் உதவி மையம்

## ஆ. பொருத்துக

1. வள்ளலார் - பசிப்பிணி போக்கியவர்
2. கைலாஷ் சத்யார்த்தி - குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்
3. அன்னை தெரசா - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்

## இ. சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. மனிதநேயம் - காந்தியடிகள், மனிதநேயமே சிறந்தது என்று கூறியுள்ளார்.
2. உரிமை - நாட்டு மக்கள் தங்கள் வாழ்க்கையை உரிமையுடனும்

மகிழ்வுடனும் வாழ வேண்டும்.

3. அமைதி - அமைதியான சூழலில்தான் நம் சிந்தனை புத்துணர்ச்சி பெறும்.

4. அன்புசெய்தல் - அனைத்து உயிர்களிடத்திலும் நாம் அன்பு செய்தல் வேண்டும்.

## ஈ. குறுவினா

**1. யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?**

மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?**

வள்ளலார் மக்களின் பசிப்பிணியை நீக்க தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார். இவரின் மனிதநேயச் செயல் வடலூரில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**3. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?**

(i) சாலையோரத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவரை அன்னை தெரசா பார்த்தார். தன் முகத்தைத் துணியால் மூடியபடியும், ஒரு கையில் பூனைக் குட்டியையும் வைத்திருந்தாள். அம்மூதாட்டியின் கைகளில் விரல்கள் இல்லை.

(ii) மனம் கலங்கியவராய் அம்மூதாட்டியைத் தொட்டுத் தூக்கினார். "சாலை ஓரத்தில் படுத்திருப்பது ஏன்?" எனக் கேட்டார்.

(iii) "என்னைத் தொடாதீர்கள், என் நோய் உங்களுக்கும் தொற்றிக்கொள்ளும். என் உறவினர்களே என்னை வெறுத்து விலக்கிவிட்டனர். என்னுடன் பேசுவதில்லை. என்னைக் கண்டாலே விலகி ஓடுகின்றனர். இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது" என அழுதார் மூதாட்டி. இதைக்கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார்.

## உ. சிறுவினா

**1. கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?**

**கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக் கால நிகழ்வு:**

(i) இவர் சிறுவயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும்பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் காண்பார். அவன் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பான். ஏன் அந்தச் சிறுவன் தன்னைப் போல் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது.

(ii) தன் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார். "பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான்." என்ற பதில் கிடைத்தது. அந்தப் பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.

KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

(iii) அவருடைய மனிதநேயம் பிற்காலத்தில் அவரைப் பள்ளி செல்லாத குழந்தைகள் மேல் பரிவு கொள்ள வைத்தது. இந்த இளமைக்கால நிகழ்வு கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்தது.

**ஊ. சிந்தனை வினா**

**1. அன்னை தெரசாவின் மனிதநேயம் பற்றிய வேறு ஒரு நிகழ்வினை அறிந்து எழுதுக.**

**அன்னை தெரசாவின் மனிதநேயம் பற்றி வேறு ஒரு நிகழ்வு :**

ஒருநாள் அன்னை தெரசா வீட்டின் வாசற்படியில் நோயால் ஒரு பெண் மயங்கிக் கிடந்தாள். அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், கால தாமதத்தால் அந்தப் பெண் இறக்க நேரிட்டாள். இந்தக் கோர சம்பவத்தால் அன்னை தெரசா "சிறிய அளவில் மருத்துவமனை" ஆரம்பிப்பது என முடிவு செய்தார்.

## விரிவானம் - முடிவில் தொடக்கம் ஒரு

**அ. சிறுவினா**

**1. "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்துக் கூறுக**

**'முடிவில் ஒரு தொடக்கம்' என்ற தலைப்பின் காரணம் :**

(i) உலகில் தோன்றுகின்ற எல்லாவற்றிற்கும் மறைவு என்பது உண்டு. தாவரங்கள்கூட தன் அழிவினால் நமக்கு நன்மையைத் தருகின்ற மரங்களை வெட்டுகிறோம். அதன் வேர் முதல் நுனி வரை நாம் பயன்படுத்துகிறோம்.

(ii) ஆனால் மனிதர்கள் இறந்தால் எதற்கும் பயன்படுவதில்லை . இதற்கு மாறாக இப்பாடத்தில் ஹிதேந்திரனின் இறப்பு ஒரு சிறுமியின் வாழ்வைக் காப்பாற்றியுள்ளது.

(iii) ஹிதேந்திரனின் இறப்பு ஒரு முடிவாகும். அச்சிறுமிக்கு ஹிதேந்திரனின் இதயத்தைப் பொருந்தியதால் அந்த இதயம் உயிர்பெற்று தன் இயக்கத்தைத் தொடங்குகிறது.

(iv) ஹிதேந்திரனின் உடலில் நின்றுபோன இதயத்தின் செயல்பாடு அச்சிறுமியின் உடலில் தொடங்கிற்று. எனவே முடிவில் ஒரு தொடக்கம் என்ற தலைப்பு சரியாகப் பொருந்துகிறது.

## அணி இலக்கணம்

**அ. குறுவினா**

**1. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?**

உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் இயல்பு நவிற்சியணி.

**2. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?**

ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

**ஆ. அகரவரிசைப்படுத்துக.**

ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஈதல், ஊக்கம், ஏது, ஔவை.

விடை:

1. அன்பு 2. ஆடு 3. இரக்கம் 4. ஈதல் 5. உயிர் 6. ஊக்கம் 7. எளிமை
8. ஏது 9. ஐந்து 10. ஒழுக்கம் 11. ஓசை 12. ஔவை

## ஆ. கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக

அ) அன்பு ஆ) நட்பு இ) உதவி

**அ) அன்பு :**

கேட்டுப் பெறுவதல்ல அன்பு
கேட்காமலே பெறுதல் சிறப்பு
அன்பு பேச்சில் மட்டும்
போதுமா? செயலில் வேண்டாமா?
பகையைப் போக்கிடும் அன்பு
வெற்றியைத் தந்திடும் அன்பு
கண்களில் அன்பைக் காட்டு
கண்முன் கடவுளே நிற்பார்.

**ஆ) நட்பு :**

காயத்திற்கு மருந்தாகும்
அழியாச் சுவடாகும்
தவற்றைச் சுட்டிக்காட்டும்
குறைகளைத் திருத்தும்
தனிமையை இனிமையாக்கும்
சோர்வில் உற்சாகமூட்டும்
நீயில்லையேல் நான்
மழைக் கானா நிலமாய்
வாடி வருந்துவேன்.

**இ) உதவி :**

கல்லாதார்க்குக் கல்வியைக் கொடு
இல்லாதார்க்குப் பொருளைக் கொடு
கைகொடுக்கும் கையாய் இருந்திடு
கார்மேகத்தைப் போல் இருந்திடு
உயர்ந்தோர் தாழ்ந்தோர் பார்க்காதே
உதவி செய்வதில் தயங்காதே
பிறர்க்கு விதைக்கும் விதையைத்தான் - நீ
அறுவடை செய்வாய் மறவாதே!

## இ. பத்தியைப் படித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

அரசர் ஒருவர் தன் மக்களிடம் 'அமைதி' என்றால் என்ன என்பதை விளக்கும் வகையில் ஓவியமாக வரைந்து கொடுப்பவர்களுக்கு மிகச்சிறந்த பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இதையடுத்து நாட்டின் முன்னணி ஓவியர்கள் அமைதியை வெளிப்படுத்தும் வகையில் பல ஓவியங்களை வரைந்து அரண்மனைக்குக் கொண்டு

வந்தனர். அரசர் ஒவ்வொரு ஓவியமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். அழகிய மலையின் அடிவாரத்தில் ஓர் ஏரி இருப்பது போல் ஓவியம் ஒன்று இருந்தது. அது மிகவும் சிறப்பாக இருந்தது. பார்த்த உடனே பறிக்கத் தூண்டும் வகையில் மலர்களின் ஓவியம் ஒன்று இருந்தது. இப்படி ஒவ்வொருவரும் அமைதியைத் தங்களுக்குத் தோன்றியபடி ஓவியத்தில் வெளிப்படுத்தி இருந்தனர். ஓர் ஓவியத்தில் ஒரு மலைமேல் இருந்து ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியின் படம் வரையப்பட்டிருந்தது. அதிலேயே இடியோடு மழை கொட்டிக் கொண்டு இருந்தது. சற்று உற்றுப் பார்த்தால் அருவியின் கீழே இருந்த மரம் ஒன்றில் பறவைக் கூட்டில் பறவை ஒன்று தனது குஞ்சுகளோடு இருந்தது. “இந்த ஓவியத்தை வரைந்தது யார்?” என்று அரசர் கேட்டார். அந்த ஓவியர் வந்தார். “இந்த ஓவியத்தில் அமைதி எங்கே இருக்கிறது?” என்றார் அரசர். அதற்கு ஓவியர் “மன்னா பிரச்சினையும் போராட்டமும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அன்று. இவை எல்லாம் இருக்கும் இடத்தில் இருந்தும், எதற்கும் கலங்காமலும், தன்னை எதுவும் பாதிக்கவிடாமலும் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி” என்றார்.

**1. அமைதி என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவது என்ன?**

அமைதி என்றவுடன் என் மனதில் தோன்றுவது “தேவையற்ற பேச்சைத் தவிர்த்து, அவசிய வேலைகளை மட்டும் செய்து பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பதே அமைதி”. மற்றும் அமைதி என்றால் தியானம் நினைவிற்கு வரும். அன்னை தெரசா நினைவிற்கு வருவார்.

**2. இக்கதையில் அமைதி எங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது?**

பிரச்சனையும் போராட்டமும் ஆரவாரமும் இருக்கும் இடத்தில் இருந்தும், எதற்கும் கலங்காமலும், தன்னை எதுவும் பாதிக்கவிடாமலும் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி என்று இக்கதையில் கூறப்படுகிறது.

**3. நீங்கள் இந்த ஓவியப் போட்டியில் பங்கு பெற்று இருந்தால் என்ன ஓவியம் வரைந்து இருப்பீர்கள்?**

ஓர் அழகான பெரிய கோவில், அங்குள்ள கருவறை, மண்டபம், தெப்பக்குளத்தில் உள்ள மீன்களுக்குப் பொரி வாங்கிப் போடுவது போன்ற காட்சி. இக்காட்சியை ஓவியமாக வரைந்து இருப்பேன்.

**4. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

எங்கே அமைதி?

**ஈ. கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | எங்கள் ஊரில் மழை | பெய்தது<br>பெய்கிறது<br>பெய்யும் |

இவை போன்று மூன்று காலங்களையும் காட்டும் சொற்றொடர்களை அமைக்க.

1. நேற்று எங்கள் ஊரில் மழை பெய்தது.
2. இன்று எங்கள் ஊரில் மழை பெய்கிறது.
3. நாளை எங்கள் ஊரில் மழை பெய்யும்.

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | என் பாட்டி பாடம் | சொல்லிக் கொடுத்தார்<br>சொல்லிக் கொடுக்கிறார்<br>சொல்லிக் கொடுப்பார். |

1. நேற்று என் பாட்டி பாடம் சொல்லிக்கொடுத்தார்.
2. இன்று என் பாட்டி பாடம் சொல்லிக்கொடுக்கிறார்.
3. நாளை என் பாட்டி பாடம் சொல்லிக்கொடுப்பார்.

**உ. கட்டங்களில் மறைந்துள்ள அணிகலன்களின் பெயர்களை எழுதுக.**

எ.கா. கம்மல்

அணிகலன்களின் பெயர்கள் :

1. கம்மல்
2. கடுக்கன்
3. சூளாமணி
4. மோதிரம்
5. சிலம்பு
6. வளையல்

| | | | | |
|---|---|---|---|---|
| க | ணி | மோ | பு | வ |
| ம் | ம | தி | ம் | ளை |
| ம | ளா | ர | ல | ய |
| ல் | சூ | ம் | சி | ல் |
| க | டு | க் | க | ன் |

AKSHAYA ACADEMY Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER